**வாக்குமூலம்**
**சார்பு நீதிமன்றம், ஒட்டன்சத்திரம்.**
**O.S.No.281/2024**
**வழக்கு சாட்சி P.W.2**
**1873ம் ஆண்டின் 10வது விதியின்படி திரு.K.சிலம்பரசன் அவர்களால் திறந்த நீதிமன்றத்தில் சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : சக்திவேல் | தொழில் | : கூலி வேலை |
| தகப்பனார் பெயர் | : தாந்தோண்டி | கணவர் பெயர் | : --- |
| கிராமம் | : கேதையுறும்பு | வயது | : சுமார் 42 |
| தாலுக்கா | : ஒட்டன்சத்திரம் | நாள் | : 13.11.2025 |
| மாவட்டம் | : திண்டுக்கல் | | |

**பிரதிவாதி தரப்பில் மேற்கொள்ளப்படும் குறுக்கு விசாரணை**

நீதிமன்றத்தில் இருந்து எனக்கு அழைப்பாணை வந்ததா என்றால் ? எனக்கு வந்தது. அந்த சம்மனை எடுத்து வந்துள்ளேனா என்றால் ? இல்லை. நீதிமன்றத்தில் இருந்து எப்போது என்னை ஆஜராக அழைப்பாணை வந்தது என்றால் ? 28.10.2025ம் தேதி அழைப்பாணை வந்தது. அன்றைய தினம் நீதிமன்றத்திற்கு வருகைபுரிந்தேனா என்றால் ? ஆமாம். வருகைபுரிந்தேன். விசாரணை மேற்கொண்டார்களா என்றால் ? ஆமாம். விசாரணை மேற்கொண்டார்கள். இந்த வழக்கிற்கு 2வது முறையாக நான் சாட்சியம் அளிக்க முன்னிலையாகியுள்ளேன் என்றால் ? சரிதான். இவ்வழக்கில் என்னை சாட்சியம் அளிக்க யார் அழைத்தார்கள் என்றால் ? சுரேஷ்குமார் தான் அழைத்தார். நான் தாக்கல் செய்துள்ள முதன்மை சாட்சிய நிரூபண வாக்குமூலத்தை யார் சொல்லி தயார் செயத்தார்கள் என்றால் ? நான் சொல்லி தான் சுரேஷ்குமார் தயார் செய்தார். நான் வாதியின் தோட்டத்தில் 10 வருடங்களாக வேலை செய்து வருகிறேன் என்றால் ? சரிதான். என்ன பரிகாரம் கேட்டு வாதி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் ? வாதியின் சொத்து என்று சொல்லி வழக்கு போட்டுள்ளார். தாவா சொத்தின் சர்வே எண் எனக்கு தெரியுமா என்றால் ? சர்வே எண் எனக்கு தெரியாது. நான்கு எல்லைகள் எனக்கு தெரியுமா என்றால் ?

தெரியாது. சொத்தின் மொத்த விஸ்தீரணம் தெரியுமா என்றால் ? தெரியாது. எனக்கு தாவா சொத்து சம்மந்தமாக எதுவும் தெரியாது என்றாலும், சுரேஷ்குமார் கேட்டுக்கொண்டதன்பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் ? சரிதான்.

C JAYAPPRAKASH

Digitally signed by C JAYAPPRAKASH
Date: 2025.11.13 18:43:24 +0530

சார்பு நீதிபதி
ஒட்டன்சத்திரம்